# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. யான கத்துற சத்தம் ரொம்ப தூரம் கேட்கும்.

   யானை பிளிரும் சத்தம் அதிக தூரம் கேட்கும்.

2. குவளையில தண்ணி ஊத்து.

   குவளையில் தண்ணீர் ஊற்று.

3. ஜன்னலத்(சாளரம்) தெற.

   ஜன்னலைத்(சாளரம்) திற.

4. நல்ல புத்தகங்களப் படி.

   நல்ல புத்தகங்களைப் படி.

5. நீ எத்தனாப்பு படிக்கிற?

   நீ எத்தனையாவது வகுப்பு படிக்கின்றாய்?

6. ஒங்க வீட்ல பூச்செடி இருக்கா?

   உனது வீட்டில் பூஞ்செடி இருக்கின்றதா?

7. காக்கா கூடு கட்டுச்சு.

   காகம் கூடு கட்டியது.

8. மீன் தண்ணில துள்ளித்துள்ளிக் குதிக்குது.

   மீன் தண்ணீரில் துள்ளித்துள்ளிக் குதிக்கின்றது.

9. செங்கல வச்சு கட்டிய வீடு.

   செங்கலை வைத்து கட்டிய வீடு.

10. வீட்டுக்கு ஒரு மரம் வளக்கனும்.

    வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்.